Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (15-12-65) இதழ் 306

விசுவாவசு கார்த்திகை 30 ஷஃபான் பிறை 21 புதன்கிழமை

## அயூப்கான் பற்றி நியூயோர்க்கில் அதிருப்தி

நியூயோர்க், டிச. 14

இன்று நியுயோர்க் வந்து சேர்ந்த பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுக்குவெறும் சம்பிரதாயமான வரவேற்பே கிடைத்ததென்றும், ஜோன்ஸன்-அயூப் சந்திப்பு எப்படியிருக்கும் என்பதற்கு இது முன்னோடியாய் இருந்ததென்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

விமான நிலையத்தில் உபசரிப்பு அதிகாரிகள் மட்டுமே அவரை வரவேற்றார்கள். எனவே அயூப்கான் தான் ஏற்கனவே தயாரித்த உரையை ஒதுக்கிவிட்டு சுருக்கமாக பதிலளித்தபின், நிருபர்கள் கேள்விகேட்குமுன் அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டதாய் கூறப்பட்டது.

நியுயோர்க்கில் அவருக்களிக்கப்படவிருந்த ஒரே வரவேற்பும் ரத்துச்செய்யப்பட்டது. ரத்துச்செய்யப்பட்டதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. 1961-ம் ஆண்டு அவருக்கு இங்குகிடைத்த வரவேற்புடன் ஒப்பிடும் போது இது தலைகீழாக இருந்ததாகக் கூறப்பட்டது.

அயூப்கான் தனது ஐ. நா. உரையில் டாஷ்கண்டில் திரு. சாஸ்திரியைச் சந்திப்பதுபற்றி எதுவுமே குறிப்பிடாதது பற்றி ரஷ்ய, கிழக்கு ஐரோப்பிய, இந்தியப் பிரதிநிதிகள் அதிருப்தியும், ஏமாற்

(6-ம் பக்கம் பார்க்க)

# பாவிக்க முடியாத மோட்டார் வாகனங்கள் 30-ந் திகதிக்கு முன் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், புதன்

உங்களிடம் பாவிக்கமுடியாத மோட்டார் வாகனங்கள் இருக்கின்றனவா? அப்படியாயின் இம்மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் அவை பாவிப்புக்கு உகந்தவையல்லவென்று உறுதிப்படுத்தும் பத்திரங்களை நிரப்பி அரசாங்க அதிபரிடம் சமர்பிக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறினுல் நீங்கள் 1966-ம் ஆண்டுக்கான லைசென்ஸ் பணத்தைச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

1966-ம் ஆண்டிற்குமோட்டார் வாகனங்களை உபயோகிப்பதில்லை என்று எண்ணும் மோட்டார்ச் சொந்தக்காரர்கள் அதற்கான பத்திரத்தை அரசாங்க அதிபருக்கு இந்தமாதம் 30-ம் திகதிக்கு முன்னர் கொடுக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படியான பத்திரங்களைக் கொடுக்கத் தவறும் வாகனச் சொந்தக்காரர்கள் 1966-ம் ஆண்டிற்கான லைசென்ஸ் பணத்தை அரசாங்க அதிபருக்குச் செலுத்த வேண்டி நேரிடும் எனவும் தெரியவருகிறது.

மாகாணங்களிலுள்ள வாகனச் சொந்தக்காரர்கள் இதற்கான பத்திரத்தை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் சமர்ப்பித்து அதற்கான ரசீதைப் பெற்றுக்கொள்ளலாம். கொழும்பு மாவட்டத்திலுள்ள வாகனச் சொந்தக்காரர்கள் வாகனங்கள் பாவிக்கவில்லை என்ற பத்திரத்தை மோட்டார் போக்குவரத்து அதிகாரிக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரம் பதிவுத் தபால் மூலம் அனுப்பபடல் வேண்டுமென்றும் எக்காரணங்களுக்காக வாகனத்தை 1966-ம் ஆண்டில் சொந்தக்காரர் உபயோகிக்க விரும்பவில்லை யென்பதையும் அப்பத்திரத்தில் குறிப்பிட வேண்டுமென்றும் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

1966-ம் ஆண்டில் வாகனங்களை உபயோகிப்பதில்லையென்று பத்திரங்கள் சமர்ப்பிக்கும் வாகனச் சொந்தக்காரர்கள் அவ்வாண்டிற்குரிய லைசென்ஸ் பணம் செலுத்த வேண்டியதில்லை.

## மாயாறு பாதை நீரில் மூழ்கியது

### நான்கு கிராமங்கள் வெளித்தொடர்பின்றி தவிப்பு!

வவனியா, செவ்வாய்

கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், சூரியனாறு, கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களில் வசிக்கும் சுமார் 2500 மக்கள், கடந்த பல வாரங்களாக, மற்றப் பகுதிகளிலிருந்து முற்ருகத் துண்டிக்கப்பட்டுவிட்டதால் அங்குள்ள மக்கள் உணவுப் பொருட்களின்றி பலத்த கஷ்டமடைந்துள்ளதாகவும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும்எடுக்கப்படப் வில்லையென்றும், வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் மராமத்து மந்திரிக்கும், மராமத்து அதிகாரிக்கும் தந்தி அனுப்பியுள்ளார்.

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக இப்பகுதிகளை, நாட்டின் மற்றப்பகுதிகளுடன் தொடுக்கும் மாயாறுபாதை, நீரில் பல அடிகள் மூழ்கிவிட்டதால், போக்குவரத்து தடைப்பட்டுவிட்டது. இதனுல் முல்லைத்தீவிலிருந்து அப்பகுதிகளுக்கு வழக்கமாக அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் கடந்த பல வாரங்களாக அனுப்பப்படவில்லை.

## தந்தி தொடர்பு தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்வர்?

### 10 கோரிக்கைகளை முன்வைத்து 7 தொழிற்சங்கங்கள் ஈடுபடும்.

காலி, செவ்வாய்

தந்தி தொடர்பு இலாகாவைச் சேர்ந்த நான்கு தொழிற்சங்கங்கள் இம்மாதம் 22-ந் திகதி அதிகாலை தொடக்கம் வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளன பத்துக் கோரிக்கைகளை வைத்தே இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதென இச்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

1962-ல் வெளியான அல்விஸ் கமிஷன் அறிக்கையில் உள்ள சில சிபார்சுகளை அமுல் நடத்துவது, பத்து வருடமாக கீழ்தரத்தில் கடமையாற்றியவர்களை இரண்டாவது. தரத்துக்கு பதவி உயர்த்துவது, இரண்டாவது தரத்தில் உள்ள மாவட்ட தந்தி தொடர்பு பரிசோதகர்களை நிரந்தரமாக்குவது, தந்தி தொடர்புபொறியியல் தொழிலாளருக்கு பாதுகாப்பு அலவன்ஸ் வழங்குவது ஆகியவைகளே சில கோரிக்கைகளாகும்.

அகில இலங்கை தந்தி தொடர்பு பொறியியல் தொழிலாளர் சங்கம், சிறீலங்கா அரசாங்க தந்தி தொடர்பு பரிசோதகர் சங்கம், கேபிள் தொழிலாளர் சங்கம் ஆகியவையும் வேலை நிறுத்தத்தில் சேர்ந்து கொள்ளத் தீர்மானித்துள்ளன.

## பரீட்சையில் தவறியமாணவன் 'யாழ்தேவி'க்கு பலி!

யாழ்ப்பாணம், புதன்

கடந்த வருடம் ஜி.சி.ஈ. பரீட்சையில் சித்திபெருத காரணத்தால் மனமுடைந்த 19 வயது மாணவன் ஒருவர் இத்தடவை அதே பரீட்சையை எடுப்பதற்கு முன், சின்னக்கடையிலுள்ள சென். ஜேம்ஸ் தேவாலயத்திற்கு தாயாருடனும், சகோதரியுடனும் சென்று வணங்கியபின் வீடு திரும்பி, தாயார் கொடுத்த 'ஒவல்டின்னையும் அருந்திவிட்டு ஓடோடிச்சென்று தண்டவாளத்தில் தலையை வைத்து படுத்து யாழ்தேவிக்கு பலியான பரிதாப சம்பவமொன்று நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்துள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த அன்ரன் ஜோக்கிம் என்பவரின் மரண விசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரண விசாரணை நடத்தினுர்.

காலஞ் சென்றவரின் தாயார் கிறேஸ் சாட்சியமளித்த போது கூறியதாவது:-

''நேற்றிரவு 7 மணிக்கு நான் எனது மகனுடனும், மகளுடனும் சென். ஜேம்ஸ் தேவாலயத்திற்கு சென்று, மகன், இம்முறை பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென வணங்கி விட்டுவந்தேன். எல்லோரும் இரவு சாப்பிட்டபின் நான் மகனுக்கு ஒவல்டின் கரைத்து கொடுத்தேன். அவர் அடுத்த அறையிலிருந்து பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தார். சுமார் அரை மணித்தியாலத்தின் பின்பு அன்ரன் என்பவர் வந்து மகன் யாழ்தேவியில் அடிபட்டு கிடப்பதாகக் கூறினுர். நானும் கணவரும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ருேம். நாங்கள் சென்ற போது அவர் மரணமடைந்து விட்டார்.

கடந்த வருடம் [illegible] ஜி. சி. ஈ. பரீட்சை [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## நாவலர் சந்தி படுகொலை

### 27-ல் விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

நாவலர் சந்தி படுகொலை வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகளான சீனி இரத்தினம், சுப்பிரமணியம், சண்முகம் ஆகிய மூவரும் கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டனர். இரசாயனப் பரிசோதகர்களின் அறிக்கை வந்து சேரவில்லை என்பது மாஜிஸ்திரேட்டின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இம்மாதம் 27ம் திகதி வரை விசாரணையை அவர் ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் திரு. ரி. கணேசலிங்கம், திருவாளர்கள் எஸ். செல்லத்துரை, ஆர். விஸ்வநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராஞர். வழக்காளி தரப்பில் அட்வகேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

## துப்பாக்கி லைசென்ஸ் தாமதம் ஏன்?

வவனியா, செவ்வாய்

வவனியா மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக பயிரைப்பாதுகாப்பதற்காகக் பலர் துப்பாக்கிக்கு விண்ணப்பம் செய்திருந்தும், இதுவரை காலமாக ஏன் தாமதிக்கப்பட்டது?

பாராளுமன்றத்தில் மேற்கண்ட கேள்வியைக் கேட்பதற்கு வவனியா எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிருர்.

துப்பாக்கி விண்ணப்பங்களில், அரசாங்க அதிபர், காரியாதிகாரிகள், பொலிஸார், எத்தனை விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் அளித்தனர்? எத்தனை அளிக்கபடாமல் நிராகரிக்கப்பட்டன? நிராகரிக்கப்பட்ட காரணங்கள் என்ன? என்ற கேள்விகளையும் அவர் கேட்பார்.

1 கோடிக்கு மேல்

## டோக்கியோ ஜனத்தொகை

டோக்கியோ, டிச. 14

கடந்த அக்டோபர் மாத [illegible] நகரின் ஜனத்தொகை 1,08,61,850 ஆக இருந்தது என அறிவிக்கப்படுகிறது. பெண்களை விட ஆண்கள் 2,76,436 பேர் அதிகமாக இருக்கின்றனர்.

## அரசாங்க ஊழியர் கொண்டாடும் நாவலர் நினைவு விழா

### இன்று ஆரம்பமாகிறது

பம்பலப்பிட்டி, புதன்

அரசாங்கஊழியர் கொண்டாடும் நாவலர் நினைவு விழா இன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் ஆரம்பமாகிறது. இவ்விழா இன்றும், நாளையும் நடைபெறும். இன்றைய விழா உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திரு. ச. சிற்றம்பலம் தலைமையில் ஆரம்பமாகும். மகா தேசாதிபதி வில்லியம் கோபல்லவா விழாவை திறந்துவைப்பார். ஸ்தல ஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம் நாவலர் திருவுருவப்படத்தை திறந்துவைப்பார். திரு. சி. சிவப்பிரகாசத்தின் வரவேற்புரையை அடுத்து தலைமையுரை இடம்பெறும்.

கல்விகலாச்சாரமந்திரி திரு. ஐ. எம். ஆர். இரியகொல்ல ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம், திருவாளர்கள் எஸ். ஜே. வி, செல்வநாயகம், மு. சிவசிதம்பரம், எஸ். தெகண்டமான், டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கி, லெஸ்லி குணவர்த்தனு, எஸ். ஏ. விஜயதிலகா, வி. எப். குணவர்த்தனு, வண. ஏ. ஜெ, சி. செல்வரத்தினம், செனட்டர் ஏ. பி. ஜெயசூரியா ஆகியோர் நாவலருக்குஅஞ்சலி செலுத்துவர்.

இதனையடுத்து இலங்கை வானொலி தமிழ்நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராசா தலைமையில் 'நாவலருக்கு அஞ்சலி' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறும். கலைஞர்கள் முருகையன், மஹாகவி, அம்பி, பி, ஆர். பெரியசாமி, 'திமிலைத்துமிலன்' நுஃமான், 'தான்தோன்றிக் கவிராயர்' பா. சத்தியசீலன் ஆகியோர் கவியரங்கில் கலந்துகொள்வர்.

பண்டிதர் கா.பொ. இரத்தினம், அல்ஹாஜ் ஏ. எம்.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

குழந்தை தனக்குத் தானே கல்வி ஊட்டிக் கொள்ளுகின்றது. தான் தான் சொல்லிக் கொடுப்பதாக நினைக்கும் ஆசிரியர் எல்லாவற்றையும் கெடுக்கின்றார். மனிதருக்குள் எல்லா அறிவுமுள்ளது. **அதைத் தூண்டி விழிக்கச்செய்வதே ஆசிரியரின் வேலை.**

— சுவாமி விவேகானந்தர்.


# ஈழநாடு

ELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு கார்த்திகை மீ 30 உ (15-12-65)


## அடிப்படை உரிமை

இலங்கை வம்சாவளிப் பிரஜை ஒருவரை மணந்து, இலங்கைப் பிரஜாவுரிமை கோரி மனுச் செய்த பெண், தமக்குப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு பிரஜா உரிமை வழங்க மறுத்து, நாட்டைவிட்டு வெளியேறுமாறு விடுத்த உத்தரவை ரத்துச்செய்ய வேண்டுமென்று கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கை விசாரணை செய்த நீதியரசர்கள் அந்தப் பெண்ணின் மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளனர்.

இந்த வழக்கைப் பற்றியோ, நீதியரசர்கள் அளித்த தீர்ப்பைப் பற்றியோ நாம் எதுவும் சொல்ல விரும்பவும் இல்லை: சொல்லவும் முடியாது. எனினும் பிரதம நீதியரசர்கள் தங்களது தீர்ப்பின் இறுதியில் குறிப்பிட்ட ஓர் அம்சம், இந்நாட்டின் சட்டதிட்டங்களை உருவாக்கும் பார்லிமெண்ட் அங்கத்தவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டிய மிக முக்கியமான விஷயமெனக் கருதுகிறோம்.

இலங்கை வம்சாவளிப் பிரஜையொருவரை மணம் செய்துகொண்ட பெண்ணுக்கு, இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க மறுத்தது சர்வதேச மனித உரிமைச் சாஸனத்துக்கு மாமுனது என்று அப்பெண்ணின் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர் தியாகலிங்கம் குறிப்பிட்டதை நீதியரசர்கள் சுட்டிக்காட்டி, ''—அபடி அதை ஏற்றுக்கொண்டாலும்கூட அது (மனித உரிமைச் சாஸனம்) இந்த நாட்டின் சட்டத்தில் ஓர் அம்சமாக இல்லை'' என்று குறிப்பிட்டிருந்தனர்.

ஐ. நா. மனித உரிமைப் பிரகடனத்தை இலங்கை உட்பட உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஐ. நா. மனித உரிமைக் கமிட்டியில் இலங்கையும் அங்கம் வகிக்கின்றது. இப்பொழுது அந்தக் கமிட்டியின் தலைவராக இலங்கைப் பிரதிநிதியே தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

இலங்கையில் சமீப வருடங்களில் இயற்றப்பட்ட சட்டதிட்டங்களும் அவைகளை அமுல் நடத்துவதிலும் இந்நாட்டு மக்களில் குறிப்பாக சிறுபான்மையினர் பாதிக்கப்பட்டு வருகிறார்களென்பதும் இச் சட்டதிட்டங்கள் பாரபட்சமானவையென்பதும், பொதுவாக இந்நாட்டுத் தலைவர்கள் பலர் வெளிவெளியாகவே தெரிவித்திருக்கின்றனர். இலங்கை அரசியல் சாஸனத்தின் 29-வது ஷரத்தின் இரண்டாவது விதி கூட சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக்கூடியவகையில் அரசியல் திட்டத்தில் திருத்தம்செய்யவேண்டுமென்றும் கூட சிறுபான்மையினரின் அரசியல் தலைவர்கள் கோரிவந்துள்ளனர்.

தாம் விரும்பிய ஒருவரை ஆணோ பெண்ணோ திருமணம் செய்துகொள்வதும் மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று திருமணத்தை அங்கீகரித்து பிரஜாவுரிமை பற்றித் தீர்மானிக்கும் பொறுப்பு ஒரு தனி மனிதரிடம் (மந்திரி) ஒப்படைப்பதும் நியாயமாகாது.

இலங்கை வம்சாவளிப் பிரஜையை மணந்தும் இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்வதற்கு இந்நாட்டின் சட்டம் இடங்கொடுக்காதது பற்றியும் நீதிமன்றம் அளித்த தீர்ப்பைப் பற்றியும் சரியா, தவறு என்பதைப் பற்றி நாம் ஆராயமுடியாதென்றாலும் ஐ. நா. மனித உரிமைச் சாஸனத்தை மதித்து, மனித அடிப்படை உரிமைகளை இந்நாட்டின் சட்டதிட்டங்களில் சேர்க்கவேண்டியது மிக அவசியம் என்பதை இவ்வழக்கு எடுத்துக் காட்டுகிறது.

## தூதுக்குழுவுக்கு பேட்டி

வல்வெட்டித்துறை, செவ்.

வடமராட்சி பஸ் பிரயாணிகள் சகக தூதுக்குழுவினரை இலங்கை போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ மேலதிகாரி சென்ற மாதம் 30-ந் திகதி பிற்பகல் இரண்டரை மணிக்கு தம்மைப்பேட்டிகாண வரச் சொல்லி ஏமாற்றியதைத் தொடர்ந்து பேட்டிகாணச் சென்ற தூதுக்குழுவினர் அவ்விடத்தில் வைக்கப்பட்டிருந்த முறைப்பாட்டுப்புத்தகத்தில் தாங்கள் அவ்விடம்வந்த நோக்கம் பற்றிய குறிப்பை குறித்து வைத்ததையொட்டியும், மேலிடத்துக்கு புகார் செய்ததைத்தொடர்ந்தும் இலங்கை போக்கு வரத்துச்சபை யாழ்ப்பாண மாவட்ட மேலதிகாரி பஸ் பிரயாணிகள்சங்கக்காரியதரிசிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இம்மாதம் 21-ந் திகதி தம்மைப் பேட்டிகாணும்படி கேட்டுள்ளார்.

## புலோலி கி. ச. வரவு-செலவுத் திட்டம்

பருத்தித்துறை, செவ்.

புலோலி கிராமசபையின் உத்தேச வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உத்தேச வரவு ரூபா 30,468 சதம் 16 எனவும், செலவு ரூபா 27,658 எனவும் தீர்மானிக்கப்பட்டது. ரூபா 2810 மிச்சம் ஏற்படும். இந்த வரவு-செலவுத்திட்டத்தில் கடந்த ஆண்டுகளை விடப் பல அபிவிருத்திவேலைகளுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# "சுதந்திர இயக்கத்துக்கு வித்திட்டவர் நாவலர்"

## நினைவுதின விழாவில் ஜனுப்அஸீஸ் கருத்து

வெள்ளவத்தை, செவ்

''ஈழநாட்டின் சுதந்திர இயக்கத்திற்கு வித்திட்டவர்களில் ஆறுமுக நாவலர் குறிப்பிடத்தக்கவர். சித்திலெப்பை, அனகாரிக தர்மபாலதேரோ போன்றோரின் வரிசையில் தேசிய வீரராகவே எண்ணத்தக்கவர் நாவலர். ஆங்கில மோகம் நிலவிய நாட்டில் தேசிய உணர்வுடன் சுதேசிய ஈழ மக்களின் தன்மானத்தைக் காத்தவரே நாவலர்'' என்று விவேகானந்த சபையினரின் இரண்டாவது நாள் நாவலர் விழாவின்போது திரு. ஏ. எம். ஏ. அசீஸ் ''நாவலரின் வரலாற்றுப்பணி'' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

சபைத் தலைவர் மு. வயிரவப்பிள்ளை தலைமையில்நடைபெற்ற கூட்டத்தில், நாவலர் காட்டிய நன்னெறி என்னும் தலைப்பில் யாழ்ப்பாண நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு. இ. திருநாவுக்கரசுவும், நாவலர் என்னும் தலைப்பில் திருமதி பாலம் லக்ஷ்மணனும் சொற்பொழிவாற்றினார்கள். 'நாவலர் பிறந்திலரேல்' என்னும் தலைப்பில் பேராசிரியர் சச்சிதானந்தாஜி சொற்பொழிவாற்றுகையில் நாவலரின் நூல்கள் படங்களின் வடிவில் வெளிவர வேண்டுமென்றும் இக்காலத்திற்கு ஏற்ற முறையில் எளிய முறையில் நூல்கள் ஆக்கப்படவேண்டும் என்றும் கூறினர்.

திரு. ஏ. எம். ஏ. அசீஸ் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:.

சித்திலெப்பை அவர்கள் வெளியிட்ட முஸ்லிம் நேசனில் ஆறுமுகநாவலரின் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கான எதிர்ப்புஉணர்வும், மொழிப்பற்றும் தெளிவாகக் காண முடிகிறது. மேலைத்தேச நாகரிகத்தின் பிரச்சார அம்சத்தை உணர்ந்து எதிர்த்த தேசிய வீரரே நாவலர். ஆங்கிலேயர் கையாண்ட முறைகளைப் பின்பற்றி அவர்தம் கலாச்சாரம் ஈழநாட்டில் புகாது எதிர்த்தவரே நாவலர்; இத்துறையில் சைவத்திற்கு மட்டுமன்றி, தமிழுக்கு மட்டுமன்றி சகல ஈழ இனத்தவர்க்கும் வழிகாட்டியாக அவர் அமைந்தார்.

ஈழநாட்டின் சுதந்திர இயக்கத்திற்கு வித்திட்டவர்களில் ஒருவரே நாவலர். காலஞ்சென்ற சேர் பொன். இராமநாதனைப்போல் அரசியல்துறையில் ஈடுபடாவிட்டாலும் சுதந்திரத்தின் மகத்துவத்தை ஈழமக்களுக்கு உணர்த்தி கலாச்சாரத்தைப் பாதுகாத்தவரே நாவலர்.''

தலைவர் மு. வயிரவப்பிள்ளை பேசுகையில் சைவம் உட்பட எல்லா மதத்தையும் பிழையாக ஒழுகியவர்களையே நாவலர் கண்டித்தார் என்று கூறினர்.

சங்கீத பூஷணம் திரு. செல்வச்சிராளனின்பாட்டுக் கச்சேரி இறுதியில் இடம் பெற்றபோது திரு. வே. சங்கரலிங்கம் வயலினும், செல்வன் நேசதுரை தியாகராஜன் மிருதங்கமும், திரு. க. சு. தமிழ்நாதன் கடமும் வாசித்தார்கள்.

''ஈழநாட்டில் பிறந்து தமிழக அறிஞர்களிலும் பார்க்கத் தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றியவர் நாவலர். நாவலர் என்ற பெயரில் இன்று காணப்படுவோரெல்லாம் சிறந்தவர்களல்ல. வளராத நிலையில் சிறப்புக் குன்றிய நிலையில் தமிழ் உரை நடைக்கு உயிர் கொடுத்தவர்தான் ஆறுமுக நாவலர். அதனுல்தான் அவரை வசனநடை கைவந்த வல்லாளர் என்று அறிஞர் போற்றுகின்றனர்'' என்று கொழும்பு விவேகானந்த சபையினரின் ஆறுமுகநாவலர் குருபூசை விழாவின் போது தலைமை வகித்துப் பேசுகையில் திரு. ஆ. கந்தையா குறிப்பிட்டார்.

அவரின் தலைமையில்நடைபெற்ற ''நாவலர் பணி சிறந்து நிற்பது மொழியிலா, நெறியிலா?'' என்னும் பட்டிமன்றத்தில் திருவாளர்கள் இ. சங்கர், அ. பொ. செல்லையா, வீ. சுந்தரலிங்கம், ஈழவேந்தன், க. சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. கந்தையா தொடர்ந்து பேசுகையில், நாவலரின் உரைநடை இன்றும் புது நடையாக இருக்கின்றதென்றும் மாணவர்களுக்கு ஏற்ற முறையில் அவர் நூல் எழுதினரென்றும் தமிழ் நூல்கள் தோன்றுத நிலையில் அனைவர்க்கும் ஏற்றதான நூல்களை எழுதியதுடன் அச்சிட்டும் வெளியிட்டாரென்றும் ஆனுல் தமிழரின் மரபு முறைப்படி அவரை அவரது காலத்தில் ஏற்றிப்போற்றிச் சிறப்புச்செய்யாது இறந்த பின் போற்ற முற்பட்டமை வருத்தத்திற்குரிய தென்றும் குறிப்பிட்டார்.

## ஆசிரியர் இடமாற்றம் பரிகாரம் என்ன?

யாழ்ப்பாணம், புதன்

''ஆசிரியர்கள் எல்லோரும் ஒன்றாக மதிக்கப்படவேண்டும்; ஒரே ஊதியம் பெறும் ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் பொருளாதார சுபிட்சமுடையவர்களாகவும், இன்னெருபகுதியினர் அல்லலுறுவோராகவும் ஆகக்கூடாது. அந்நிலை நாட்டின் பொருளாதாரத்துக்கே ஹானி விளைவிக்கும். ஆசிரியர்கள் மற்றை உத்தியோகத்தர்கள் போல் அல்லாது. பிஞ்சு உள்ளங்களுடன் உறவாடிக் கல்வியையும், கல்வியினுலாம் பயனையும் பெறவைக்கவேண்டியவர்கள் என்ற இன்னோரன்ன பல பெரியார்களின் கூற்றுக்களைப் பெற்றோரும், ஆசிரியராகிய யாமும் உணர்கிறோம் வரவேற்கின்றோம்'' என்று தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி தமிழாசிரியர் சங்கம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரு திட்டவட்டமான தொடர்ந்து செயல்முறையில் இருக்கக்கூடிய மாற்றத் திட்டத்தையன்றி, காலையில் பட்டியை அரக்குதல் போன்ற எருக்கட்டல் மாற்றத்திட்டத்தை எதிர்க்கின்றோம் என அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா அடிக்கடி பலகூட்டங்களில் பேசியதையும் ''அரசாங்க சேவைக்கமிஷன் இருப்பது போல, 95000 ஆசிரியர்களுக்கு ஓர் ஆசிரிய சேவைக் கமிஷனை உருவாக்கி, அதன் மூலமே ஆசிரியர் நியமனம் உயர்ச்சி, எதிரான விளக்கங்கள், மாற்றங்கள் ஆதியன நடைமுறைக்குக் கொண்டு வரப்படல்வேண்டும்; அதுவரையும் ஆசிரியமாற்றங்கள் நிகழவேகூடாது' என, கல்விமந்திரி யாழ்ப்பாணம் வந்தகாலை அன்னுருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மந்திரியவர்களுக்கு இடித் துரைத்தமையையும், சென்ற ஆண்டு 150 ஆசிரியர்கள் மாற்றக்கட்டளை பெற்றபொழுது 'திட்டமில்லாது மாற்றுதல் வட்டத்துளையுள் சதுரத்தடியை நுழைத்தல் போல் ஆகுமாதலால், ஆசிரியர் மாற்றத்தை நிறுத்திவைக்கவும்' எனதிரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அந்நாள் மந்திரியாருக்கு அனுப்பிவைத்த கடிதத்திலுள்ள கருத்துக்களையும் 1-1-66-ல் நிகழஇருக்கும் ஆசிரியர் மாற்றத்திற்கு வித்தியாபீடம் பரிகாரமாகக் கொள்ளவேண்டுமென நாம் அவாவுகின்றோம்.

### ஆசிரியருக்குக் கடிதம்

## உதவி கிடைப்பது எப்போது?

1964-ம் ஆண்டில்நிகழ்ந்த சூருவளியால் ஏற்பட்ட கடற் பெருக்கு பூநகரிப் பகுதியில் சுமார் 3000 (மூவாயிரம்) ஏக்கர் நிலத்தில் விளைந்து கிடந்த வேளாண்மை முழுவதையும் அழித்தது. இதனுல் கொல்ல குறிச்சிக் கிராமசேவையாளர் பிரிவில் உள்ள வேளாண்மை பொதுவாகப் பெரிதும் பாதிக்கப்பட்டது. சிறப்பாகச் செல்லியாதீவுக் கமங்களும் அதனைச் சூழவுள்ள கமங்களும் முற்ருக அழிக்கப்பட்டன. கடற் சேறும், கடல் நீரும் வயல்களுட் பரவித் தங்கி நின்று நல்ல நிலங்களையெல்லாம் உவர் நிலமாக்கிவிட்டன.

இப்பகுதி விவசாயிகள் காலபோகமொன்றையே நம்பி வாழ்பவர்கள். வருடத்தில் ஒரு முறை கிடைக்கும் பலனைக்கொண்டே ஒரு வருடக் குடும்பச் செலவைச் சமாளிப்பதோடு கமத்தைப் பண்படுத்தும் முயற்சிகளையும் செய்வார்கள். இவர்கள் 1965ம் ஆண்டில் தாம் நெல்லால் பெறவிருந்த உத்தேசம் 7,20,000(ஏழு லட்சத்து இருபதினுயிரம்) ரூபாவையும் வைக்கோலால் பெறவிருந்த 90,000 (தொண்ணூருயிரம்) ரூபாவையும் பயிர்களைத் தோற்றுவிக்கச் செலவு செய்த சுமார்3,75,000(மூன்று லட்சத்து எழுபத்தையாயிரம்) ரூபாவையும் இக்கடற் பெருக்கால் இழந்தார்கள்.

கிருஷிகப்பகுதி, கமத்தொழிற்பகுதி உதவி ஆணையாளர்கள், காரியாதிகாரி, பொதுநலச் சேவை உத்தியோகத்தர்கள், உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்கள் சிலர், எமது பாராளுமன்ற உறுப்பினர் முதலாயினேர் இப்பேரழிவை நேரில் பார்த்து அனுதாபப்பட்டனர். மனம் நொந்து செய்வதொன்றறியாமல் நின்ற கமக்காரரை இப்பெரியார்கள் அன்புடன் நோக்கி உதவி பெற்றுத்தருகிறோமெனத் கூறித் தேற்றினுர்கள்.

கைப்பொருளில்லாத இக்கமக்காரர்கள் பலநோக்குச் சங்கங்கள் வாயிலாகவும் வேறு வழிகளாலும் பெற முடிந்த கடன்களைப் பெற்ருர்கள். உழுதும் உழுவித்தும் தக்க பசளையிட்டும் நிலத்தைப் பண்படுத்தினுர்கள். விலைக்குப் பெறக்கூடிய நெல்லைப் பெற்று வித்திட்டார்கள். ஆனுல் பணம் பெற மேலும் பிறவழியில்லாமையால் பல ஏக்கர் நிலங்களைப் பண்படுத்தாமல் செய்யாமல் விட்டனர். கடலால் அழிந்த கமங்களைப் பண்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்குங்களெனப் பூநகரிப்பகுதிக்கு விவசாயப்பகுதி 10,00,000 (பத்து லட்சம்) ரூபா தந்தார்கள் என்பதை விவசாயிகள் அறிந்தனர்.

எங்கள் இடர்களை மிகப் பொறுமையுடன் சமாளித்துக்கொண்டு இப்பண உதவி எங்களுக்குக் கிடைக்கும் நாள் எந்நாளோவென எதிர்பார்க்கின்றோம்.

வை. வல்லிபுரம்,
செல்லியா தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜீய அரங்கு

# ஆபிரிக்க வெளிமந்திரிகளுக்கு கெய்ரோ அழைப்பு

## பிரிட்டனுடன் ராஜதந்திர உறவை முறிப்பது பற்றி விவாதிக்கப்படும்

### பாதுகாப்புசபை ஒத்திவைப்பு

கெய்ரோ, டிச. 14

பிரிட்டனுடன் ராஜதந்திர உறவை முறித்துக் கொள்வது பற்றி ஆராய, ஆபிரிக்க வெளிநாட்டு மந்திரிகளின் விசேஷ மகாநாடு ஒன்றை ஐக்கிய அராபியக் குடியரசு அழைத்திருக்கிறது.

இதற்கிடையில் ரொடீஷியா சம்பந்தமாக நேற்றிரவு கூடவிருந்த ஐ. நா. பாதுகாப்பு சபை இன்றுவரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது. ஸ்மித் அரசாங்கத்துக்கெதிராக பொருளாதாரத்தடையை கட்டாயப்படுத்தும் முகமாக பாதுகாப்பு சபை கூட வேண்டும் என கென்யா கேட்டிருந்தது.

பிரிட்டனுடன் ராஜதந்திர உறவை முறித்துக் கொள்வது பற்றி ஆபிரிக்க நாடுகளிடையே முரண்பட்ட கருத்துக்கள் இருப்பதாகத் தெரிகிறது.

நேற்று டென்மார்க், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் ஸ்மித் அரசாங்கத்துக்கெதிராக மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

நைரோபி வழியாக விமானத்தில் வரும் ரொடீஷிய சாமான்களை கென்யா முடக்கி வருவதால், தென்னாபிரிக்கா வழியாக அவைகளைக் கொண்டு செல்ல கிழக்காபிரிக்க விமானக் கம்பெனி தீர்மானித்திருக்கிறது.

---

## பலே ஆசாமி

பாரிஸ், டிச. 14

''டிகால், ரஷ்யாவிடம் அமெரிக்கவிரோதியாகக் காட்டுகிறார். அமெரிக்காவிடம் ரஷ்ய விரோதியாகக் காட்டுகிறார். சீனாவிடம் ரஷ்யா. அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் விரோதியாகக் காட்டிக் கொள்கிறார். அவர் பலே ஆசாமி'' என எதிர்தரப்பு அபேட்சகர் மீட்டெராண்ட் குற்றஞ்சாட்டினார்.

(பி. டி. ஸி.)

## சீனர் ஊடுருவல்

புதுடில்லி, டிச. 14

நேபாவில் லாங்ஜூ பகுதியில் 400 சீனர்கள் ஊடுருவி பாதுகாப்புக் குழிகளை அமைத்துவருவதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 300 சீனத் துருப்புக்கள் வடசிக்கிமில் ஊடுருவி இந்தியத் துருப்புக்களுடன் 3 மணி நேரம் சண்டையில் ஈடுபட்டார்கள் என்றும், இதில் சீனருக்கு கணிசமான ஆட்சேதம் ஏற்பட்டதென்றும் அறிவிக்கப்படுகிறது.

இந்தியத் தரப்பிலும் சேதம் ஏற்பட்டது. மேல் விபரங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

வேறு பல இடங்களிலும் சீன ஊடுருவல்கள் இருந்தன என்று அறிவிக்கப்படுகிறது.

# ஸ்ரீரங்கம் திருப்பணிக்கு ரூ. 50 லட்சம் திட்டம்

சென்னை, டிச. 14

ஸ்ரீரங்கம் ரங்கநாதஸ்சுவாமி ஆலயத்திருப்பணிக்காக ரூ. 50 லட்சம் திட்டத்தைக் குறித்து டாக்டர் ஏ. ராமஸ்வாமி முதலியாரைத் தலைவராகக்கொண்ட திருப்பணிக் கமிட்டி ஆலோசனை நடத்தியது.

அறநிலையக்கமிஷனர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் திருபணித் திட்டத்தை விளக்கினார்.

''35 சந்நிதிகளும், 21 கோபுரங்களும், 7 பிரகாரங்களும், இதைத்தவிர உறையூர், திருவெள்ளறை என்ற உபதேவாலயங்களும் திருப்பணித் திட்டத்தின்கீழ் வருகின்றன. திருமதில்களின் நீளம் 6 மைல்கள். இவ்வளவையும் புனருத்தாரணம் செய்ய ரூ. 50 லட்சம் பிடிக்கும்என கூறப்பட்டது.

ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சாரஸ்தாபனம் திருப்பணிச் செலவில் ஒருபகுதியை ஏற்கும் என்றும் அறிவிக்கப் பட்டது.

## ''பாகிஸ்தானின் அசட்டுத் துணிச்சல்''

புதுடில்லி, டிச. 14

பாகிஸ்தான் இந்தியாவை மீண்டும் தாக்கும் என்ற அசட்டுத் துணிச்சலை எவரும் தள்ளிவிட முடியாது என்றும், எனவே மக்கள் எதற்கும் தயாராய் இருக்க வேண்டும் என்றும் உள்நாட்டு மந்திரி திரு. நந்தா கேட்டுக்கொண்டார்,

பாகிஸ்தான் சமீபத்திய சண்டையில் பெற்றதோல்வி காரணமாகவே ராஜஸ்தானில் ஊடுருவல் மேற்கொண்டது என்றும் அவர் கூறினார்.

## சீன ஆக்கிரமிப்பை அனுமதியோம்

-- பவுல்ஸ்

புதுடில்லி, டிச. 14

ஆசியா முழுதும் சீனா ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டிருக்கிறது என அமெரிக்க ஸ்தானிகர் திரு. செஸ்டர்பவுல்ஸ் நேற்று ஒரு வைபவத்தில் பேசிய போது குறிப்பிட்டார்.

ஆனால் இதைப் பூர்த்தி செய்ய அனுமதிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

சீனாவுக்கெதிராக உபயோகிப்பதற்கு கொடுக்கப்பட்ட ஆயுதங்களை பாகிஸ்தான் இந்தியாவுக்கெதிராக உபயோகித்திருப்பதால், இனி அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி கொடுக்காது என்பதில் சந்தேகமில்லை என்று இக்கூட்டத்தில் பேசிய அமெரிக்க செனட்டர் ஒருவர் குறிப்பிட்டார்.

## அயூப் பற்றி அமெரிக்க பத்திரிகை

நியுயோர்க், டிச; 14

வாஷிங்டன்மீது ஜனாதிபதி அயூப்பின் நோக்கமும், கொள்கையும் ஓரளவு மாறுதவரை அமெரிக்க—பாகிஸ்தான் நெருக்க உறவு கஷ்டமானதாகவே இருக்கும் என ''நியுயோர்க் ஹெறால்ட் டிரிபியூன்'' பத்திரிகை கூறியிருக்கிறது.

கம்யூனிஸ்ட் சீன அபாயத்தை ஆயூப் உணரவேண்டும் என்றும், பாகிஸ்தான் பத்திரிகைகள் கடைப்பிடிக்கும் அமெரிக்க விரோத சீன ஆதரவுப்போக்கை கைவிட வேண்டும் என்றும் அது மேலும் கூறியுள்ளது.

பி டி ஸி

## சீனப் படகுகள் மீது யு. எஸ். தாக்குதல்

பீகிங், டிச. 14

ஹைனன் தீவுக்கருகே சீன மீன் பிடிப் படகுகள்மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியதில் ஒரு சீனர் கொல்லப்பட்டார் என்றும், 7 சீனர்கள் காயமடைந்தனர் என்றும் பீகிங் ரேடியோ அறிவித்தது. 3 படகுகள் சேதமுற்றன என்றும் அது கூறியது.

## மாஸ்கோவில் அல்ஜீரிய அதிபர்

மாஸ்கோ, டிச. 14

அல்ஜீரிய அதிபர் கேர்னல் பொமீதியன் மாஸ்கோவில் ஜனாதிபதி பொட்கோர்னி, பிரதமர் கோஸிஜின் ஆகியோருடன் பேச்சு நடத்தினார். பொருளாதார ஆயுத உதவிபற்றி அவர் தொடர்ந்து பேசுவார் என அறிவிக்கப்பட்டது.

## மாபெரும் அவதான நிலையம்

புதுடில்லி, டிச. 14

பிரிட்டனிலுள்ள ஜோர்டப் பேங்க் அவதான நிலையத்தைவிட 5 மடங்கு பெரிய அவதானநிலையம் உதகமண்டலத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

## ஐ. நா.வில் திபேத்

ஐ. நா., டிச. 14

திபேத் மக்களுக்கு மனித உரிமையும், ஆதார சுதந்திரமும் அளிக்கவேண்டும் என 7 நாடுகள் கொண்டு வந்துள்ள தீர்மானம் இவ்வாரம் ஐ. நா.வில் விவாதிக்கப்படும்.

## பாதுகாப்பு சபை அங்கத்துவம்

ஐ. நா., டிச 14

பாதுகாப்புசபைக்கு முழு 2 ஆண்டுக்கால அங்கத்துவ நாடாக ஜப்பான் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. உகண்டா, நியூஸிலந்து ஆகிய நாடுகள் ஒவ்வோர் ஆண்டு அங்கத்தினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## ஜெமினி - 6 செல்லவில்லை

கேப்கென்னடி, டிச. 14

கோளாறு காரணமாக, ''ஜெமினி - 6'' உந்து ராக்கெட் உயரே செல்லத் தவறிவிட்டதால், மீண்டும் நாளை அதை அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

## மெடானில் சீன எதிர்ப்பு

ஜாகர்த்தா, டிச. 14

நேற்று மெடான் நகரில் நடைபெற்ற சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடக்க இந்தோனேஷியப் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பலர் கொல்லப் பட்டார்கள்.

## நிஸாமின் தங்கநிதி

ஹைதரபாத், டிச.14

உலகில் பெரிய செல்வந்தர் எனக் கூறப்படும் ஹைதரபாத் நிஸாம் தேசிய பாதுகாப்புநிதிக்கு 4 1/4 லட்சம் கிராம் தங்கத்தை கொடுத்திருக்கிறார்.

ஐ. நா. வில் அயூப் உரை

# காஷ்மீர் வாக்கெடுப்புக்கு இந்தியா சம்மதித்தால்....

## போர் விலக்க உடன்பாட்டுக்கு தயார் என்கிறார் அயூப்

ஐ. நா, டிச. 14

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே காஷ்மீர் தான் அடிப்படைத் தகராறுக்குக் காரணமாய் இருக்கிறதென்றும், காஷ்மீர் பிரச்சனை தீர்க்கப்படும் வரை நெருக்கடி தொடர்ந்திருக்கும் என்றும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் ஐ. நா. மகாசபையில் பேசிய போது குறுப்பிட்டார்.

இந்த நெருக்கடியில் இதர நாடுகளும் இழுத்துச் செல்லப்படலாம் என அவர் கூறினார்.

காஷ்மீரில் சர்வஜன வாக்குரிமைக்கு இந்தியா சம்மதித்தால் இந்தியாவுடன் போர் தவிர்ப்பு உடன்பாடு செய்து கொள்ளத் தாம் தயாராய் இருப்பதாயும் அவர் கூறினார்.

பாகிஸ்தான் அதிபர் தன் உரையை முடித்துவிட்டு வெளியே சென்றதும் இந்தியப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி பேசினார்.

தகராறுக்கான பிரச்னைகளைத் தொடாமலிருப்பதே ஐ. நா. மகாசபையில் பேசும் ஒரு நாட்டுத் தலைவரின் வழக்கம் என்றும், ஆனால் அயூப் இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னையைத் தொட்டிருக்கிறார் என்றும் அவர் கூறினார்.

காஷ்மீர் இந்தியாவின் பகுதி. இது பற்றி அதிபர் அயுபின் பேச்சு சமாதானத்துக்கு உதவி புரியமாட்டாது.

காஷ்மீருக்கு சுயநிர்ணய உரிமை என்ற நிபர்தனையில் அயூபின் போர் விலக்க உடன்பாடு அர்த்தமற்றது'' என்றும் அவர் கூறினார்.

## ஆஸ்திரேலியா 6 விக். 443 ரன்

பிரிஸ்பேன், டிச. 14

6 விக்கெட் நஷ்டத்திற்கு 443 ரன்கள் எடுத்து ஆஸ்திரேலியா தன் முதல் இன்னிங்ஸை முடித்துக்கொண்டது.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை இங்கிலாந்து ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 25 ரன்கள் எடுத்திருந்தது.

ஆஸ்திரேலிய வால்டர் 155 ரன்கள் எடுத்து அவுட் ஆனார்.

இன்று ஆட்டத்தின் 2-ம் நாள். இப்போது நடப்பது முதல் டெஸ்ட். பிரிஸ்பேனிப் இங்கிலாந்துக்கும், ஆஸ்திரேலியாவுக்குமிடையே இது நடக்கிறது.

## பொட்ஸ்வானு குடியரசு

லொபாட்ஸி, டிச. 14

அடுத்த ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி சுதந்திரமடையும் பெச்சுவானுலந்து, காமன்வெல்த்துக்குள் ''பொட்ஸ்வானு குடியரசு'' என்ற பெயரில் இயங்கிவரும் என பிரதமர் ஸெரட்ஸிகாமா கூறினார்,

(பி. டி. ஸி.)

# ஆஸி கிரிக்கெட்டில் புதிய நட்சத்திரம் வால்டர்ஸ்

## அடுத்தவாரம் 20 வயது ஆரம்பம்

பிரிஸ்பேன், டிச. 14

இங்கிலாந்துக்கெதிரான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் 155 ரன்கள் எடுத்து அவுட்டான 19 வயதுள்ள டக்வால்டர்ஸ், யுத்தத்திற்குப் பின் இங்கிலாந்துக்கெதிராக செஞ்சரி எடுத்த ஆஸ்திரேலியர்களில் மூன்றாவதாவார்.

அடுத்த வாரம் 19 வயது முடிந்து 20 வயதை அடையும் வால்டர்ஸ், சென்ற மாதம் எம். ஸி. ஸி.யுடன் விளையாடிய ஒரு ஆட்டத்தில் 129 ரன்கள் எடுத்திருந்தார்.

தென் ஆஸ்திரேலியாவுக்கெதிராக நியூசவுத் வேல்ஸ் கோஷ்டியில் அவர் 253 ரன்கள் எடுத்ததுடன், 63 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

1964-65-ம் ஆண்டில் முதல்தர விளையாட்டுகளில் அவர் 730 ரன்கள் எடுத்தார். சராசரி 26 ரன்களுக்கு ஒன்றாக 33 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இங்கிலாந்துக்கெதிராக நடைபெற்ற ஆட்டத்தில் செஞ்சரி எடுத்த 10-வது ஆஸ்திரேலியர் அவராகும்.

1876-77-ல் பானர்மன், 1893-ல் கிரஹாம், 1901-2-ல் டப், 1907-8-ல் ஹார்ட்டிகன், 1920-21-ல் கொலின்ஸ், 1924-25ல் பொன்ஸோல்ட், 1928-29ல் ஜேகஸன், 1948ல் ஹார்வி, 1950-51ல் பேர்க் ஆகியோக் இங்கிலாந்துக்கெதிராக செஞ்சரி எடுத்தவர்கள். (பி. டி. ஸி)

## மூலஸ்தானத்தில் மகேந்திரபூசை

இராமேஸ்வரம், டிச. 14

இராமேஸ்வரத்திலுள்ள இராமநாதசுவாமியின் மூலஸ்தானத்தில் நேபாள மன்னர் மகேந்திராவும், ராணி ரத்னாவும் நேற்று பூசை செய்தனர். காஞ்சி காமகோடி சங்கராச்சாரியாரும், சிருங்கேரி சங்ராச்சாரியாரும், தான் இந்த மூலஸ்தானத்தில் பூசை செய்ய உரிமைபெற்றவர்கள். நேபாள அரச குடும்பத்துக்கு இந்த விசேஷ வாய்ப்பு இப்போது கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆலயப் பிரவேசம்

யாழ்ப்பாணம், புதன் இணுவில் அம்பலவாண கந்தசாமி கோவிலில் நேற்று ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. சகலரும் ஆலயத்துக்குள் சென்று தரிசிக்க அனுமதிக்கப்பட்டனர். கோவில் பரிபாலன சபையினரின் முயற்சியாலும், பொதுமக்கள், பொதுநல ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் ஆதரவோடும் இந்த நல்ல கைங்கரியம் இடம் பெற்றது.

## இருவருக்கு போட்டியில்லை

### புலோலி கி. ச. தேர்தல்

பருத்தித்துறை, செவ்வாய் புலோலிக் கிராமச்சபையின் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நேற்றுக் காலை அபேடசகர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போதைய தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை 9-ம் வட்டாரத்துக்கும் இளைப்பாறிய ஸ்டேஷன்மாஸ்டர் திரு. கே. ஆர். செல்லத்துரை 7-ம் வட்டாரத்துக்கும் போட்டியின்றி அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தற்போதைய அங்கத்தவர்களில் தலைவரைவிட ஐவர் மட்டுமே போட்டியிடுகின்றனர். புதிய வாலிபர்கள் பலர் இம்முறை போட்டியில் கலந்துகொள்ள முன்வந்திருப்பதுடன் சிறுபான்மைத் தமிழர் ஆறு பேரும் போட்டியில் இறங்கியுள்ளனர்.

7-ம், 9-ம் வட்டாரங்களைத் தவிர்ந்த ஏனைய பத்து வட்டாரங்களிலும் மொத்தம் 26 பேர் போட்டியிடுகின்றனர்.

## புற்றுநோய் தடுப்பு பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன் நாவாந்துறைசென்மேரிஸ் சனசமூக நிலையத்தில் யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கத்தின் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது.

'அச்சம் காரணமாகவும் புற்றுநோயைப்பற்றிய அறிவின்மையாலும் ஆரம்பத்தில் சிகிச்சை பெறவேண்டிய அவசியத்தை உணராமையாலும் புற்றுநோய் எனச் சந்தேகப்படும்போதும் அநேக மக்கள் இதற்கான வைத்திய ஆலோசனை பெறுமல் இருக்கின்றனர். பலர் புற்றுநோயால் தாம் வருந்துவதை அறிந்தால் மற்றவர்கள் அவமானம் என எண்ணுவதால் வைத்தியர்களுக்கும் இனத்தவர்களுக்கும் சிநேகிதர்களுக்கும் இதனை மறைக்கின்றனர். இந்த மனோநிலை காலகதியில் நம்மைவிட்டகலவேண்டும் என இக்கூட்கித்துக்குத் தலைமைவகித்துப்பேசியநிலையத்தலைவர் திரு. எஸ்தாக்கி குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்துபேசுகையில் புற்றுநோயைத் தடுப்பதற்கு தற்காலத்தில் இருக்கும் நவீன வசதிகள்பற்றிக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட புற்றுநோய் நிவாரணசங்கத்தினரால் வெளியிடப்பட்ட புற்றுநோய் தடுப்புசம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள் கூட்டத்தில் விநியோகிக்கப்பட்டன. திரு. சு. அமிர்தநாதர் நன்றிகூறினார்.

அழுக்கணவன், புழு, பூச்சி 3-ம் அழிப்பதற்கு புதிய ஜேர்மன் மருந்து

BAYER

பொலித்தியோன்

FOLITHION

விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

T'GRAMS:- ROYAE ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

**கொல்லங்கலட்டி விநாயகர் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்திய கட்டிட வேலை**

கொல்லங்கலட்டி விநாயகர் பலநோக்கக் கூட்டுறவு சங்கத்தின் தலைவரால் புதிய கட்டிட வேலைக்கு 'சீல்' வைக்கப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிட்ட கேள்விகள் 6 ஜனவரி 1966 (6-1-66) பிற்பகல் 5-30 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கட்டுப்பணமாக 110 ரூபா செலுத்தியபின் சங்கத்தின் முகைமையாளரிடமிருந்து 5 ஜனவரி 1966 (5-1-66) நண்பகல் 12 மணி வரையும் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில் கேள்விப்பத்திரம் அனுப்பப்படவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் தேவையான ஒப்பந்தம் செய்ததும். கட்டுப்பணத்திலுள்ள 100 ரூபா திருப்பிக் கொடுக்கப்படும்.

3 இதர விபரங்களை சங்கத்தின் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வ. சரவணமுத்து,
தலைவர்

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
14-12-1965. 1501


## அப்பீலில் சிறைத்தண்டனை

வல்வெட்டித்துறை, செவ்வாய்

1965-ம் ஆண்டு பங்குனி மாதம் 22-ந் திகதி பருத்தித்துறை 2-ம் குறுக்குத் தெருவில் வசிக்கும் பிலிப்பு சவரிமுத்து, செபஸ்ரியான் செல்லத்தம்பி ஆகிய இருவரையும் அதே ஊரைச் சேர்ந்த தேவசகாயம் யேசுதாசன். சாமியன் சகாயம். வைத்தி அடைக்கலராசா என்பவர்கள் அலவாங்கால் அடித்து பொல்லால் தாக்கி காயப்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து அப்பீல் நீதிமன்றத்திற்கு மனுச் செய்ததையொட்டி அப்பீல் நீதிமன்றம் முதலாம் எதிரியான தேவசகாயம் யேசுதாசன் என்பவருக்கு எட்டு வாரச் சிறைத்தண்டனையும். இரண்டாம் மூன்றும் எதிரிகளான சாமியன் சகாயம், வைத்தி அடைக்கலராசா ஆகிய இருவருக்கும் தலா ஆறுவாரச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது


குழந்தைக்கு
மிகச்
சிறந்தது....



செரமி
பேபி ஓடிக்கொலோன்
உங்களுக்கும் சிறந்தது
எங்கும் கிடைக்கும்.


# தமிழ் மொழிச் சட்டம் இம்மாதத்தில் சமர்ப்பிக்கப்படும்

## கிளிநொச்சி எம். பி. நம்பிக்கை

கிளிநொச்சி, செவ்.

''மொழிஉரிமை. நில உரிமை முதலிய அடிப்படை உரிமைகளை இழக்கும் நிலைமை உருவாகும பொழுது இதனுல் பாதிக்கப்படும் மக்கள் எவ்வித வேற்றுமையும் பாராட்டாது ஒற்றுமைப்பட்டு ஒரு கட்சியில் சேர்ந்து தங்கள் உரிமைக்கு போராடவேண்டியது அவர்களின் முதல்கடமையாகும். தமிழ் மக்கள் இதனை உணர்ந்து தமிழரசுக்கட்சியை ஆதரித்து உரிமைப்போராட்டங்களை நடாத்தியபடியினுல் இன்று நாம் இழந்த உரிமைகளைபெறும் வாய்ப்பைபெற்றிருக்கின்ருேம்'' என்று கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் துணுக்காய் தமிழரசுக்கட்சிக்கிளையினை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது: இம்மாத முடிவிற்குள் தமிழ்மொழிச்சட்ட பிரமாணங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஒற்றுமைப்பட்டு ஒருகுரலில் உரிமைகேட்கும சிறுபான்மையினத்தை எந்த பெரும்பான்மையினரும் அடக்கிவிடமுடியாது, தமிழரசுக்கட்சி தனிப்பெருங்கட்சி என்பதை இலங்கை மக்கள் மங்டுமன்றி பிறநாட்டு மக்களும் உணர்ந்துள்ளனர்.

துணுக்காய் கிராமசபைத் தலைவர் திரு. சோமசுந்தரம் தமிழரசுக்கட்சி உறுப்பினராகச் சேர்ந்துகொண்டார்.

பின்வருவோர் துணுக்காய் கிளையின் அலுவலாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. க. கணபதிப்பிள்ளை, செயலாளர்: திரு. கா. தம்பு, பெருளாளர்; திரு. ஆ. குலசேகரம்.

பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் யோகபுரத்தில் ஒரு கிளையும் மல்லாவியில் ஒரு கிளையும் நிறுவப்பட்டது.

# 'இடமாற்றத்தை நிறுத்துக'

## வலி. மேற்கு தமிழாசிரியர்சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

வலிகாமம் மேற்குத் தமிழாசிரியர்சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் பண்ணுகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. க. நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், கூறியதாவது:- ஆசிரியர்கள் வெளிமாகாணங்களில் கஷ்டமுறுகின்றனர் என்றும் அவர்கள் வடமாகாணத்திற்கு வரத்தான் வேண்டுமென்றும் வடமாகாணத்தில் மேலதிக ஆசிரியர்கள் உண்டானது பாராளுமன்ற பிரதிநிதிகளாலல்ல என்றும் கூறினுர்.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கமுன் அளவான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ஆசிரிய சங்கங்கள் இடமாற்றத்தை ஏற்கின்றன. நியாயமான திட்டங்களை வகுத்து ஆசிரியர் இடமாற்றம் நிகழத்தான் வேண்டும். திட்டமற்ற இடமாற்றம் இருப்பது சரியல்ல. மேலதிக ஆசிரியர்களை மாற்றுவதாலுல் தென்னிலங்கையில் மூடப்படும் பாடசாலைகளைத் திறப்பதற்கு வழிவகுக்கவேண்டியது எமது கடமை. நியாயமற்ற தவருன இடமாற்றங்கள் இருப்பின் அவற்றை ஆசிரிய சங்கங்கள் சுட்டிக்காட்டினுல் ஆசிரிய சங்கங்களுடன் சேர்ந்து ஒத்துழைப்புத் தருவதற்குப் பின்னிற்கமாட்டேன். எந்த வகையில் இடமாற்ற விஷயத்தில் தவறு நடந்ததோ அவற்றை நிறைவேற்றவும் தயார்.''

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் தமது உரையில், மேலதிக ஆசிரியர்களை இடமாற்றுகிறோம் ன்று தம்பதிகளாயுள்ளாரையும், விவாகமாகாத பெண்களையும், வயது கூடியவர்களையும் பாடசாலை வளர்ச்சிக்கு மிக முக்கியத்துவம்வாய்ந்த ஆசிரியர்களையும் மாற்றுவதால் யாழ்ப்பாணத்திலுள்ள கல்வித்தரம் சீரழிக்கப்படுகிறதென்றும் கூறினுர்.

அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா, பொதுக் காரியதரிசி திரு. இ. குமாரசாமி ஆகியோரும் இடமாற்றப் பிரச்னையில் காணப்பட்ட பல்வேறு தவறுகளையும் எடுத்துக்காட்டினர். இந்துக் கல்லூரி அதிபர் திரு. ந. சபாரத்தினம் தொழிற் சங்க நடவடிக்கைகளின்படி. ஜனநாயகரீதியில் சங்கங்கள் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளைக் கூறினுர்,

இக்கூட்டத்தில் இரு பிரேரணைகள் நிறைவேறின.

1. 1-12-60 க்கு முன் சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்யக்கூடாது என இச்சபை தீர்மானிக்கின்றது.

2. 1-1-66 ல் நடைபெற இருக்கும் இடமாற்றம் முறையற்றதாகையால் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசித்து திட்டவட்டமான ஒரு முடிவு கண்டு கொள்ளும்வரையும் தற்காலிகமாக இந்த இடமாற்றத்தைத் தவிர்க்க வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

சங்கச் செயலாளர் திரு. ந. நடேசர் நன்றியுரைகூறினுர்

## 'ஆசிரியரிடையே ஒற்றுமை அவசியம்'

கண்டி, செவ்வாய்

''அரசினர் பாடசாலை ஆசிரியர், முகாமையாளர் பாடசாலை ஆசிரியர் என்ற இரு பிரிவுகள் இருந்த காலம் போய், வடமாகாணத்தில் சேவைசெய்யும் ஆசிரியர், வெளிமாகாணத்தில் சேவை செய்யும் ஆசிரியர் என்ற பாகுபாடு தோன்றி, எதிர்ப்பும், பூசலும் மலிந்து வருகிறது. இது கவலைக்குரிய ஒன்ருகும். இலங்கை அரசியலில் ஒற்றுமை ஏற்பட்டு நல்ல சூழல் உருவாகிவரும் இவ்வேளையில் ஆசிரியரிடையே உள்ள இப்பிரிவினை மிகவும் வேதனைதரக்கூடியதாகும்'' என இலங்கை தமிழ் ஆசிரிய ஐக்கிய முன்னேற்ற சங்கத்தின் காரியதரிசி திரு. இ. சரசானந்தவேல் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் யாவரும் பரந்த மனப்பான்மையுடன் சமூகசேவை செய்யக்கடமைப்பட்டவர்கள், அப்படியில்லாமல் குறுகிய மனப்பான்மை

(6-ம் பக்கம் பார்க்க)


REGAL—JAFFNA
NOW SHOWING
American International's
OPERATION
BIKINI



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கண்ணைக் கவரும் டிசைன்களில் தமிழ்-ஆங்கில ''கிறிஸ்மஸ் கார்ட்டுகள்'' எம்மிடம் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். S. சவிரிமுத்து, 73, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 1436

கண்ணைக் கவரும் டிசைன்களில் தமிழ்-ஆங்கில 'கிறிஸ்மஸ்புதுவருட கார்ட்டுகள்' தொகையாகவும் சில்லறையாகவும் எம்மிடம் மலிவாக பெற்றுக்கொள்ளலாம். பவன் ஆட்ஸ், மொம்ஸாக் பில்டிங்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1474

22 சிறீ 3000 தொடர் வரிசையிலுள்ள வான் விற்பனைக்குண்டு. நல்ல நிலைமையிலுள்ளது. தொடர்பு கொள்ளவும். 127, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1488

கிளிநொச்சியில் வயலும் கட்டடம் கட்டக்கூடிய நிலமும், சாவகச்சேரியில் வீடும், கட்டடம் கட்டக்கூடிய நிலமும் விற்பனைக்குண்டு. எம். மார்க்கண்டு, சாவகச்சேரி என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். 1486

### தேவை

சாதுரியம் மிக்க கன்வசர்கள் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாருடைய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். ஏனைய விபரங்கட்கு: நடராஜா கரேஜ், 42, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1487

### தேவை

புத்தூர் ஆவரங்கால் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் பண்டசாலைப் பகுதிக்கு ஒரு விற்பனையாளர் தேவை. வயது 22—40. கல்வித்தராதரம்: எட்டாம் வகுப்பு (ஆங்கிலம் அல்லது தமிழ்), கூட்டுறவுப் பயிற்சியில் குறைந்தது இரண்டு மாதப் பயிற்சிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பிணை ரூ. 250/- சம்பளம்: அடிப்படைச் சம்பளம் ரூ. 60-00 அத்துடன் மேலதிக நேரம். மேற்படி சங்கக் காரியதரிசிக்கு 27-12-65-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

### கல்வி

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பெண்கள் கல்லூரியில் பெண்களுக்கு ஒரு விடுதலைகாலப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும். சுருக்கெழுத்து, தட்டியலும், வர்த்தகமும் (ஆங்கிலம்)பொலிரெக்னிக் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துதல் ஆகிய வகுப்புக்கள் நடைபெறும். விண்ணப்ப முடிவு திகதி 5-1-66. 10-ந் திகதி வகுப்புக்கள் ஆரம்பமாகும். விண்ணப்பிக்கவும்: வி. சத்தியநாதன் கௌரவ காரியதரிசி, த. பெ. இல. 41, யாழ்ப்பாணம் 1485



ராஜா
(யாழ்ப்பாணம்)
எஸ். பாலச்சந்தர்
எல். விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை



8-வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 6, 9-30 மணிக்கு

தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
ஈஸ்மென்கலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக

# மாணவர் ஊர்வலத்துக்கு பொலிஸார் தடை

## விசாரணை நடத்துமாறு பிரதமருக்கு 15 எம். பி.க்கள் கோரிக்கை

கொழும்பு. திங். பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த 4000 கலை, விஞ்ஞான, சட்டப்பட்டதாரி மாணவர்கள் பேராதனைச் சம்பவத்தைத்தொடர்ந்து பேராதனை மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இன்று பிற்பகல்2 மணிக்குநடாத்தவிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு கொழும்பு பொலிசார் தடை விதித்தனர். பட்டதாரி மாணவர்களுக்கு பொலிஸ் றேடியோ மூலம் கல்விமந்திரி பேசுகையில் நடைபெறவிருக்கும் கொழும்பு மாநகரசபைத் தேர்தலின் நிமித்தம் தேர்தல் சட்டப்படி ஊர்வலம் சட்டவிரோதமானது என்னுல் சனிக்கிழமைச் சம்பவங்களைப்பற்றி விசாரணை செய்யப்படுமென்றும் விசாரணைக்குழுவினர் விரைவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டப்படுவர் என்றும் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து ஊர்வலம் ரத்துச் செய்யப்பட்டது.

சனிக்கிழமைச்சம்பவங்களைப்பற்றி விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் டட்லி பொலிஸ் அதிகாரியிடம் கோரியுள்ளதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது.

ஆயுதந் தாங்கிய 75 பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் 4 அதிகாரிகளையும் கொண்ட மூன்று பொலிஸ் வான்களும் இன்றுஅதிகாலையில் இருந்து கொழும்பு தேஸ்டன் வீதியில் நிறுத்தப்பட்டிருந்தன. சுமார் 4000 மாணவர்கள் வீதியின் இருமருங்கிலும் திரண்டிருந்தனர். பல்கலைக் கழக வாயில்கள் அடைக்கப்பட்டிருந்தன.

### அரசாங்க எம். பி.க்கள் கோரிக்கை

உடனடியாகப் பல்கலைக் கழகச் சம்பவத்தையிட்டு விசாரணை நடத்தவேண்டுமென 15 அரசாங்கக்கட்சி எம். பி.க்கள் பிரதமரிடம் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளனர். ஒழுங்கீனமாக நடந்த மாணவர்களை விட பொலிஸாரை அழைத்துப் பலாத்காரமாக மாணவர்கள் கலைக்கப்படவேண்டிய அளவுக்கு நிலைமையை மோசமடைய விட்டதற்காக உபவேந்தர் அட்டிகலை குற்றஞ்சாட்டப்படவேண்டியவர் என்ற கருத்தை இவர்கள் தெரிவித்தனர்.

கலைப்போதனபீடத் தலைவர் பேராசிரியர் குணசேகரா உபவேந்தரின் அறிக்கையில் பிழையான தகவல்கள் உள்ளனவென்பதைத் தெரிவித்ததைத் தொடர்ந்து உபவேந்தர்மீது நம்பிக்கையின்மையைப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# 'ஒழுக்கமே கல்வியின் முக்கிய நோக்கம்'

## மந்திரி ஹுருல்ல பேச்சு

யாழ்ப்பாணம, திங், ''கல்வியின் முக்கிய குறிக்கோள் ஒழுக்கமாகவும், கட்டுப்பாட்டுடனும் வாழ்வதில்தான் தங்கியிருக்கின்றது. ஒழுக்கத்தைப் பற்றி இளம்சந்ததியினருக்கு போதியளவு தெரிந்திருக்கவில்லையென்பது சர்வகலாசாலையில் நிகழும் சம்பவங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்'',

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட போக்குவரத்து மந்திரி திரு. ஈ. பி. என். ஹுருல்ல மேற்கண்டவாறு கூறினுர்.

மந்திரி மேலும் கூறியதாவது:-

கல்விபற்றிய வெள்ளை அறிக்கை புதிய நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும்- கடந்த ஒன்பது வருட காலமாக ஒழுங்கீனமான, அரசாங்கம் நடைபெற்று வந்தது. ஒருசிறந்த கடமை நம்மை எதிர்நோக்கியுள்ளது.

நான் உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்து இதுதான் முதல்தடவை. நான் கல்வி பயின்ற பழைய பாடசாலையில் தற்பொழுது இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். ந. நி.

# 'சங்கீதக் கல்லூரிக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முயல்வேன்'

## ஆண்டுவிழா?ல் மந்திரி வாக்குறுதி

யாழ்ப்பாணம், செவ் ''கல்விகலாச்சார மந்திரி யாழ்ப்பாணம் வந்தசமயம் மாலை சூட்டி அன்புடன் கௌரவித்தோம். நமது குறைநிறைகளை கவனிப்பாரென்ற நம்பிக்கையுடன். ஆனுல் எமது துரதிருஷ்டமோ என்னவோ நம்மைப் பற்றி அவருக்கு நினைவூட்ட வேண்டியிருக்கிறது. இருந்தபோதிலும் பிறநாட்டில் உள்ள உதவியளிக்கும் ஸ்தாபனங்களின் உதவியுடன் இக்கல்லூரிக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதருவதற்கு ஆவனசெய்வேன்.''

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபா சங்கீகக்கல்லூரியின் மூன்ருவது ஆண்டு நிறைவுவிழாவுக்கு தலைமை வகித்த ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் பேசுகையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சன்மார்க்க போதன ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் மந்திரி திரு. திருச்செல்வம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இரண்டாயிரம் ஆண்டு காலமாக தமிழ், கலை, கலாச்சாரம் உயர்வுபெற்று உலகெல்லாம் போற்றிப் பேணப்பட்டு வந்ததிற்குச் சரித்திரங்கள் இன்றும் சான்றுகூறுகின்றன. கடந்த 9 ஆண்டுகாலமாகத் தான் தமிழ்மொழியும், தமிழ் பேசும் மக்களும் 'அனுதை'களாக வாழவேண்டிய ஒரு சூழ்நிலைஏற்பட்டது. ஆனுல் இன்று தமிழ்பேசும் மக்கள் தலைநிமிர்ந்து நிற்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

யாழ். மாவட்ட உதவி வித்தியாதிபதி திரு. எஸ் தணிகாசலம் பேசுகையில் மாணவர்களிடையே ஒழுக்கம் குன்றிவிட்டதென்றும் கலாசாலைகளில் மாணவர்கள் தாம் எதற்காகச் சென்ருேமென்பதனை மறந்து விபரீதமான செயல்களில் ஈடுபடுவது வேதனையளிக்கக்கூடியதாக இருக்கின்றதென்றும் மாணவர்கள் ஒழுக்கம் உள்ளவர்களாக வாழவேண்டும் என்றும் சொன்னுர்.

சங்கீதக்கல்லூரி மாணவிகளின் இசைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# "ஆசிரியரை இடம்மாற்றுதீர்"

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் கடமையாற்றும் உதவி ஆசிரியரும், பாம்புக்கடி வைத்திய நிபுணருமான திரு. கே. சிற்றம்பலத்துக்கு தலவாக்கொல்லை சுமண மகாவித்தியாசாலைக்கு ஜனவரி முதலாந்தேதி முதல் வழங்கப்பட்டிருக்கும் இடமாற்றத்தை ரத்துசெய்யும்படி கல்விமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நேற்றுமாலை நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபையின் விசேஷ கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேயர் திரு. எஸ். ஸி. மகாதேவா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மேற்கண்ட தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

ஆசிரியர் திரு. சிற்றம்பலத்தின் மாற்றத்தை ரத்துச் செய்யும்படியும் அவசியமானுல் அவரை யாழ் நகரிலுள்ள அவரது வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு நியமிக்கும்படியும் வித்தியாதிகாரியை உடனடியாகப் பணிக்கவேண்டுமென கல்வி மந்திரியை இச்சபை வேண்டிக்கொள்கிறது.

வாடிவீட்டுக் காப்பாளர் பதவியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பாதுகாப்பாளர் பதவியொன்றை உண்டுபண்ணுவதென்றும், இக்கடமைகளைச் செய்வதற்கு வேண்டிய சகல அறிவும் அனுபவமும் திரு. எஸ். சிலுவைராசாவிடம் உள்ளதால் அவரைப் பாதுகாப்பாளர் பதவிக்கு நியமனம் செய்யவேண்டுமென்றும் கூறும் மற்றொரு தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# ஆஸ்திரேலியா 384 ரன்

பிரிஸ்பேன், டிச.13 ஆஸ்திரேலியாவுக்கும்இங்கிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 3-வது நாளான இன்று ஆட்டநேர இறுதிவரை, ஆஸ்திரேலியா [illegible] விக்கெட் நஷ்டத்திற்கு 384 ரன் எடுத்தது.

# 'சுடமுடியுமானுல் சுடு என்றதும் துப்பாக்கிச்சப்தம் கேட்டது'

## இராமியன்கல்லு படுகொலை பற்றி சாட்சியம்

வவனியா, செவ் ''காலஞ் சென்றவர் கந்தசாமியை நோக்கி 'உன்னுல் சுடமுடியுமானுல் சுடு!' என்று ஆத்திரத்துடன் கூறினுர். சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூடு கேட்டது காலஞ் சென்றவர் முழங்கால் மடித்து விழுந்தார். அவர் மார்பிலிருந்து இரத்தம்ஒடிக்கொண்டிருந்தது.''

வவனியா இராமியன் கல்லு என்னுமிடத்தில் நடைபெற்ற படுகொலை சம்பந்தமாக வவனியா மாவட்ட கூட்டு மாஜிஸ்திரேட் திரு. எம். சலால்டீன் ஸ்தலத்தில் விசாரணை நடத்தியபோது, எஸ். சபாபதி சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மராமத்துப் பகுதி தொழிலாளியான எஸ். இராசையா (35 வயது) துப்பாக்கியால் சுடப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானதாகக் கூறப்படும் கொலை சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின்போதுதான் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

சபாபதி மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று காலஞ்சென்றவரும் நானும் வவனியாவிலிருந்து மாலை வீடு வந்து சேர்ந்தோம். காலஞ் சென்றவர் தமது வீட்டை நோக்கிப் போனுர். சிறிது நேரத்துக்குப்பின் கந்தசாமியும் இறந்தவரும் வாக்குவாதப்பட்டுச் சத்தம் கேட்டது. அது நடந்தது எனது வீட்டுக்குப் பக்கத்தில். நான் கந்தசாமியிடம் சென்று சமாதானப்படுத்தினேன். கந்தசாமி தனது விஷயத்தில் பிரவேசிக்கவேண்டாம் என்று என் கன்னத்தில் அடித்தார். பின்னர் ''நான் தகுந்த பாடம் படிப்பிக்கிறேன்'' ன்று சொல்லிவிட்டு கந்தசாமி ஓடினுர். சிறிது நேரத்துக்கு பிறகு வெடிச் சத்தம் ஒன்று கேட்டது நான் சென்று பார்த்தபோது கந்தசாமி துவக்குடன் ஓடிவருவதைப் பார்த்தேன். அந்த நேரம் காலஞ் சென்றவர் தமது வீட்டுப் படலைக்கு முன்னுல் நின்றுகொண்டிருந்தார், பின்னர் இறந்தவருக்கு நேராக துவக்கைஇலக்குவைத்தார்.

வவனியா மாவட்ட வைத்தியஅதிகாரி திரு. பாலசிங்கமும்சாட்சியமளித்தார்.

மேற்படி சம்பவத்தின் போது பாவிக்கப்பட்டதாகக்கருதப்படும் துப்பாக்கி ஒன்று சம்பவம் நடந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள வயல் ஒன்றில் புதைக்கப்பட்டிருந்து பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டது.

சந்தேக நபர்களான பி. சுப்பையா, எஸ். கந்தசாமி, எஸ். புஷ்பநாதன் ஆகியோரை இம்மாதம் 17-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

மேல்விசாரணை இம்மாதம் 17-ந் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

### 'ஆசிரியரிடையே...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யுடையவர்கள் அச்சேவைக்கு தகுதியற்றவர் ஆவர். தமிழ் ஆசிரியர்கள் தமிழ் பிள்ளைகளை வளர்த்து, தமிழை வளர்த்து, தமிழைக் காக்கவேண்டியவர்கள். குறுகிய மனப்பான்மையையும் சுயநலத்தையும் விட்டு அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பரீச்சையில் . . .

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

அதில் சித்திபெருத காரணத்தால் எந்நேரமும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

யாழ்தேவி என்ஜின் சாரதி எப். ஏ. வில்லியம்ஸ் சாட்சியமளித்த போது, யாழ்ப்பணத்தை நோக்கி 30 மைல் வேகத்தில் வந்தபோது, காலஞ் சென்றவர் புகையிரதபாதையில், தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுத்திருந்ததாகவும், புகையிரதத்தை நிறுத்த எடுத்த முயற்சி பயனளிக்கவில்லையென்றும், அவருக்கு மேலால் புகையிரதம் சென்றதாகவும் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை நடத்தும்படி சட்டவைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதைப் பின்போட்டார்.

### அரசாங்க . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏ. அசீஸ் ஆகியோர் நாவலர் பற்றி சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்துவர். நடனவிருந்துடன் முதல் நாள் விழா முடிவடையும்.

இரண்டாம் நாள் விழா சுகாதாரஅமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு, பாலசிங்கத்தின் தலைமையில் விழா ஆரம்பமாகும்.

புலவர் சிவன் கருணலய பாண்டியனுர் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

பண்டிதர் க. வேந்தனுர், வித்துவான் பொன். முத்துக்குமாரன், எஸ். எம். கமால்தீன், இரா. சிவலிங்கம் கி. லட்சுமணன், கா. சிவத்தம்பி ஆகியோர் நாவலர் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவர்.

திரு. அ. அமிர்தலிங்கம், வண. தர்மரத்தினதேரோ ஆகியோர் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்துவர்,

நடனவிருந்துடன் விழா முற்றுப்பெறும்.

### அயூப்கான்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றமும் தெரிவித்திருக்கிருர்கள்.

இன்று அயூப்பும், ஜனதிபதிஜோன்ஸனும் நடத்தும் பேச்சுக்களில்பாகிஸ்தான்-சீன உறவு முக்கிய இடம்பெறும்எனவாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.

### பெரியகடை படுகொலை

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாணம் பெரியகடை படுகொலை சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான நாகாராசாவை நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்செய்தனர்.

சந்தேக நபரான நாகராசா நேற்று மாலை மாஜிஸ்திரேட்டிடம் ஒப்புதல் வாக்குமூலம் ரகசியமாக அளித்தார்.

சந்தேகநபர் மீது குற்றச்சாட்டுப் பத்திரிகை தாக்கல் செய்வதற்காக இம்மாதம்27ந் தேதிவரை றிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

### அத்தியாவசிய பொருட்கள் வந்தன

பல்பலப்பிட்டி, திங். பருப்பு, வெங்காயம், கருவாடு, துணிவகை உட்பலப்பல அத்தியாவசியப் பொருட்கள் கொழும்பு வந்திருக்கின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி; 69-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org